திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தமிழகம் முழுவதும் ஏழைகளுக்கு 1.20 லட்சம் இலவச கறவை மாடுகள், ஆடுகள்**

ச. குமரன்

First Published : 02 Aug 2011 11:06:17 AM IST

தருமபுரி, ஆக. 1: தமிழகத்தில் ஏழை மக்களுக்கு, இலவச கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டப் பணிகளை தீவிரப்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது.

சட்டப் பேரவைத் தேர்தலின்போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. அதன்படி, மாநிலம் முழுவதும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் ஏழை, எளிய மக்களுக்கு அடுத்த 5 ஆண்டுகளில் 60,000 கறவை மாடுகள் மற்றும் 60 ஆயிரம் செம்மறி ஆடுகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

வரும் செப்டம்பர் மாதத்துக்குள் பயனாளிகளைத் தேர்வு செய்து, இத்திட்டத்தைத் தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களுக்கும் சமமான எண்ணிக்கையில் கறவை மாடுகள், ஆடுகள் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளன.

மாவட்ட வாரியாக பயனாளிகள் தேர்வு: அந்தந்த மாவட்ட வருவாய்த் துறையினர் மூலம் வறுமைக் கோட்டுக்கு (பி.பி.எல்.,) கீழ் உள்ள மக்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இதில் பெண்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு தலா 30 சதவீதம் ஒதுக்கீடு வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு ஜெர்சி ரக கலப்பின பசுக்கள் (முதல் ஈற்று) வழங்கப்படும். இந்த ரக கலப்பின பசு மாட்டின் விலை ரூ. 20 ஆயிரம் முதல் ரூ. 70 ஆயிரம் வரை விற்கப்படுகிறது. இது தினமும் அதிகபட்சமாக 25 லிட்டர் வரை பால் கொடுக்கும் திறன் கொண்டது. தகுந்த சூழல் உள்ள மாவட்டங்களில் மட்டுமே ஜெர்சி கலப்பின பசுக்களை வழங்க முடியும்.

இந்த ஆண்டில் 12,000 மாடுகள்:

ஜெர்சி கலப்பின பசுக்களை கர்நாடகத்தில் உள்ள சிந்தாமணி, சென்றாயப்பட்டனம் சந்தைகளில் இருந்து மொத்தமாக வாங்க பரிசீலிக்கப்படுகிறது.

இலவச ஆடுகள்: இலவச ஆடுகள் வழங்கும் திட்டத்துக்கு தேர்வு செய்யப்படும் பயனாளிக்கு தலா 3 பெண் ஆடுகள், ஒரு ஆண் ஆடு வழங்கப்படும். இந்த ஆடுகளை தமிழகத்திலேயே கொள்முதல் செய்ய அரசு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக மாவட்டம் வாரியாக கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகள், மருத்துவர்கள் கொண்ட குழுக்கள் விரைவில் அமைக்கப்பட உள்ளன. இதுதொடர்பாக அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் ஓரிரு நாளில் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தவும் அரசு உத்தரவிட்டுள்ளது.

முதற்கட்டமாக இந்த ஆண்டுக்கான மொத்த ஒதுக்கீடாக 12,000 இலவச கறவை மாடுகள் வரும் செப்டம்பர் மாதத்துக்குள் வழங்கப்படும்.

மாடுகளுக்கு காப்பீடு, தடுப்பூசி வசதி: மாடுகளுக்கு நோய் பாதிப்பு ஏற்படாமல் தடுக்கும் வகையில் தடுப்பூசிகள் போடுவது உள்ளிட்ட தீவிர கண்காணிப்புப் பணியில் கால்நடை மருத்துவர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

மாடுகள் மற்றும் ஆடுகளுக்கு காப்பீடு வசதியும் செய்யப்படும். பயனாளிகள் பராமரிக்கும் கறவை மாடுகளிடம் இருந்து பெறப்படும் பால், கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும்.

ஆடு, மாடுகளை கொள்முதல் செய்து வழங்குவது, அவற்றின் இனப் பெருக்கம் மற்றும் உயர் ரக தீவனங்களை வழங்கவும் அரசு முன்னுரிமை அளிக்கவுள்ளது. முதல்வர் ஜெயலலிதா இத் திட்டத்தை விரைவில் தொடங்கி வைக்க உள்ளார்.

தினமலர்

குசும்பா சாகுபடி

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2011,00:00 IST



மானாவாரி (நவம்பர்) கே 1, கோ 2. நிலம் தயாரித்தல்: நிலத்தை இரண்டு அல்லது மூன்று முறை டிராக்டர் கலப்பையால் (அ) ஐந்துமுறை நாட்டு கலப்பையால் உழவேண்டும். பின் மண்ணில் உள்ள கட்டிகளை உடைத்து நுண்மைப்படுத்த வேண்டும்.

**தொழு உரமிடுதல்**: நிலம் தயாரித்த பிறகு 12.5 டன் தொழு உரம் (அ) மக்கிய தென்னை கழிவு இடவேண்டும். தொழு உரமானது உழுவதற்கு முன் இடப்படவில்லையெனில், கடைசி உழவுக்கு முன் தொழு உரத்தை இட்டு மூடவேண்டும்.

**விதையும் விதைப்பும்**: விதை அளவு எக்டேருக்கு 10 கிலோ.

**விதை நேர்த்தி**: ஒரு கிலோ விதையுடன் 4 கிராம் திரம் அல்லது கார்பன்டசிம் மருந்தைக் கலந்து 24 மணி நேரம் கழித்து விதைக்க வேண்டும். இவ்வாறு விதைநேர்த்தி செய்வது வேர் அழுகல் நோயிலிருந்து பயிரினைப் பாதுகாக்கும்.

**விதைக்கும் முறை**: விதைகளை 2 முதல் 3 செ.மீ. ஆழத்தில் வரிசையாக நடவு செய்ய வேண்டும். விதைகளை கொரு அல்லது நாட்டுக் கலப்பை மூலமாக வரிசையில் நடவு செய்யலாம்.

**இடைவெளி**: நடவு செய்யும் போது வரிசைகளுக்கு இடையே உள்ள இடைவெளியானது 45 செ.மீ. ஆகவும், வரிசையில் உள்ள செடிகளுக்கிடையே உள்ள இடைவெளியானது 15 செ.மீ. இருக்குமாறும் விதைக்க வேண்டும். விதைத்த 15ம் நாள் செடிக்குச் செடி 15 செ.மீ. இடைவெளி விட்டு செடிகளை களைத்துவிட வேண்டும்.

**உரமிடுதல்**: பயிருக்குத் தேவையான தழைச்சத்தான 20 கி/எக்டர் அடியுரமாக இடவேண்டும். களைக்கட்டுப்பாடு விதைத்த 25 நாள் மற்றும் 40 நாள் ஆகிய இருமுறை களைளை, களைக்கொத்தி மூலமாகவோ கைக் களையாகவோ எடுக்க வேண்டும்.

**அறுவடை**: முதிர்ந்த இலைகள் மற்றும் முழுச்செடியும் பழுப்பு நிறமாக மாறுவது முதிர்ச்சியைக் குறிக்கும். அறுவடை செய்யப் பட்ட பயிரினை களத்தில் வைத்து, கொண்டைகளைப் பறித்து உலர்த்தியபின் விதைகளைத் தனியே பிரித்தெடுத்து வெயிலில் உலர்த்தி சுத்தம் செய்ய வேண்டும். அறுவடைக்குப் பின் விதைகளை நன்கு உலர்த்திய பின்பே கோணிகளில் சேமிக்க வேண்டும்.**எம்.அகமது கபீர், தாராபுரம்-638 656.மொபைல்: 93607 48542**.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2011,00:00 IST

மானாவாரி சாகுபடிக்கு ஏற்ற நெல் ரகம் "அண்ணா 4': கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2009ம் ஆண்டு நவம்பர் மாதம் "அண்ணா 4' என்ற புதிய மானாவாரி நெல் ரகத்தை வெளியிட்டது. ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் மானாவாரி நெல் சுமார் ஒரு லட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய 105

நாட்கள் வயதுடைய "அண்ணா 4' நெல் ரகம் செப்டம்பர்-அக்டோபர் மாத நேரடி விதைப்பிற்கு ஏற்றது. 66 சதம் அறவைத்திறனும் நீண்ட சன்னமான வெள்ளை அரிசியையும் கொண்டது. இந்த ரகம் எக்டருக்கு சராசரியாக 3.7 டன் தானிய விளைச்சலைத் தரவல்லது.

கடந்த 2010ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பரமக்குடி வட்டாரத்தைச் சேர்ந்த கருங்குளம், சிங்கராயபுரம், தொழுபெத்தனேந்தல், மற்றும் போகலூர் வட்டத்தைச் சேர்ந்த சேமனூர் ஆகிய கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்ட 88 உழவர்களின் நிலங்களில் ஒரு ஏக்கர் பரப்பளவில் செயல்விளக்கத் திடல்கள் அமைக்கப்பட்டன. ஆகஸ்ட் மாத இறுதி வாரத்திலும், செப்டம்பர் மாத முதல் வாரத்திலும் நேரடி விதைப்பு மேற்கொள்ளப் பட்டது. இதில் கருங்குளம், சிங்கராயபுரம், தொழுபெத்தனேந்தல் ஆகிய கிராமங்களில் செப்டம்பர் மாதம் முதல் வாரத்திலும் அதைத் தொடர்ந்த நாட்களிலும் போதுமான மழை பெய்தது. ஆனால் சோமனூர் கிராமத்தில் செப்டம்பர் மாதம் 3ம் வாரத்தில் முதல் மழை பெய்தது. அதனைத் தொடர்ந்து மழை கிடைத்தது. பயிர் வளர்ச்சிக் காலத்தில் கருங்குளம், சிங்கராயபுரம் ஆகிய கிராமங்களில் இலை சுருட்டுப்புழு தாக்குதல் மட்டும் தென்பட்டது. அதனைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்ற பயிர் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டன.

பயிர் வளர்ச்சிக் காலத்தில் போதுமான மழை பெய்தது. "அண்ணா 4' நெல் ரகம் மட்டுமின்றி இதர ரகங்களும் செயல் விளக்கத் திடல் அமைக்கப்பட்ட கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்டன. குறிப்பாக ஆடுதுறை நெல் ரகங்களும் நாட்டு நெல் ரகங்களும் சாகுபடி செய்யப்பட்டன. இவை கதிர் முதிர்வடையும் பருவத்தில் பெய்த மழையினால் சாய்ந்துவிட்டன. ஆனால் அண்ணா 4 நெல் ரகம் மட்டும் சாயாத தன்மையுடன் காணப்பட்டது. இதனை விவசாயிகள் ஆச்சர்யத்துடன் பார்வையிட்டனர்.

கருங்குளம் கிராமத்தில் 3 விவசாயிகளுக்கு முறையே 2722, 2722, 2770 கிலோ தானிய விளைச்சல் கிடைத்தது. இது எக்டருக்கு சராசரியாக 6750 கிலோ விளைச்சலாகும். மானாவாரி விவசாயத்தில் இத்தகைய விளைச்சலை நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்று உழவர்கள் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளனர். பயிரின் சாயாத தன்மை, பூச்சி, நோய் தாக்குதலுக்கு எதிர்ப்புத்திறன் ஆகிய குணங்கள் இத்தகைய விளைச்சலை தங்களுக்கு பெற்றுத்தந்ததாக விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர். மேலும் இதர உயர்விளைச்சல் ரகங்களை சாகுபடி செய்யும்பொழுது மேற்கொள்ளும் பூச்சி, நோய் கட்டுப்பாடு தொடர்பான செலவினங்கள் அண்ணா 4 நெல் சாகுபடி செய்வதன்மூலம் தவிர்க்கப் பட்டதாகவும் தெரிவித்தனர் விவசாயிகள்.

நான்கு கிராமங்களிலும் அமைத்த செயல்விளக்கத் திடல்களில் சராசரியாக ஏக்கருக்கு 2041 கிலோ தானிய விளைச்சல் கிடைத்துள்ளது. இது இதர கிராமங்களின் விளைச்சலைவிட 7 சதம் முதல் 22 சதம் வரையிலும் நாட்டு ரகங்களின் விளைச்சலைவிட சுமார் 101 சதம் வரையிலும் அதிகமாகும். மதுரை5 ரகம் சராசரியாக 1897 கிலோவும் ஆடுதுறை ரகங்கள் 1883 கிலோவும்

கொடுத்துள்ளன. (தகவல்: ச.செந்திவேல், ஆர்.கந்தசாமி, வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பரமக்குடி. 94422 61756)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**மதுரை பகுதியில் நெல் சாகுபடியில் அடுத்தது என்ன?**



பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2011,00:00 IST

பெரியார், வைகை பாசனத் திட்டத்தின் கீழ் நெல் சாகுபடி என்ற கட்டுரையை விவசாயிகள் தினமலரில் படித்துவிட்டு தேர்ந்துஎடுத்த நெல் ரகங்களை நடவு செய்துள்ளனர். பயிர்களுக்கு தேவையான கட்டுக்கோப்பு முறைகளை விவசாயிகள் கடைபிடிக்க வேண்டும். நெற்பயிருக்கு காய்ச்சலும் பாய்ச்சலுமாக நீர்ப்பாசனம் செய்யலாம். கதிர்கள் உருவாகும் தருணத்திலிருந்து அறுவடை நிலை வரை நான்கு முதல் ஐந்து செ.மீ. அளவிற்கு நீர் பாய்ச்சி, கட்டியநீர் ஆவியானவுடன் மீண்டும் நீர் கட்ட வேண்டும். சதுரமுறை நடவினை செய்துள்ளவர்கள் கோனோவீடர் கருவியை உபயோகிக்க வேண்டும். இப்பணியை பத்து நாட்கள் இடைவெளியில் இரண்டு அல்லது மூன்று முறைகள் செய்யலாம். பயிரின் ஆரம்ப கட்டத்தில் களைகளை கட்டுப் படுத்த பூட்டாகுளோர் என்ற களைக்கொல்லியை 2.5 லிட்டர்/ஏக்கர் என்ற அளவில் உபயோகித்து களைகளை அழிக்கலாம். விவசாயிகள் சாகுபடியில் சுத்த சாகுபடி செய்ய வேண்டும். அதாவது வயல்களில் உள்ள வரப்புகளில் உள்ள களைச் செடிகளை முழுமையாக அகற்றிவிட வேண்டும். அப்போது வயலில் நெற்பயிர் மட்டும் அழகாகத் தோன்றும். இதனால் பயிர் மேல் சூரிய வெளிச்சம் நன்றாக விழும். வரப்புகளில் எலிகள் தொந்தரவு இருக்காது. பயிர்களில் பூச்சி, வியாதி அதிக அளவில் இருக்காது. அடுத்து பயிர் நன்கு வளர சிபாரிசு செய்யப்பட்ட உரங்களை இடவேண்டும். மேலுரம் குறிப்பிட்ட தருணங்களில் இடவேண்டும். இது கவனித்து செய்ய வேண்டிய பணியாகும். பயிருக்கு எக்டருக்கு 120:38:38 கிலோ தழை, மணி, சாம்பல் சத்துக்கள் இடப்படுகின்றன. தழை, சாம்பல் சத்துக்களை பிரித்து இடுவதால் பயிர் வளர்ச்சி செழிப்பாக இருக்கும். இவைகளுக்கு முன் எக்டருக்கு 25 கிலோ ஜிங்க் சல்பேட்டை உலர்ந்த மணலுடன் கலந்து வயலில் நடவுக்கு முன் பரவலாக மண்ணின் மேல் பரப்பில் தூவிவிட வேண்டும்.

நெற்பயிரைத் தாக்கும் முக்கிய பூச்சிகளான தண்டு துளைப்பான், சாம்பல் மற்றும் பச்சை தத்துப்பூச்சி, கதிர் நாவாய்ப்பூச்சி, இலை சுருட்டுப்புழு, புகையான், ஆனைக்கொம்பன் ஈ இவைகள் நெற்பயிரை தாக்குகின்றன. நோய்களில் குலைநோய், பாக்டீரியா இலை கருகல் நோய், கதிர் உறை அழுகல் நோய், தானிய நிறமாற்றும் நோய் இவைகளுடன் எலிகளின் தாக்குதல் மகசூலை பெரிதும் பாதிக்கின்றன. விவசாயிகள் தாவர மற்றும் உயிரின முறைப்படி பயிர் பாதுகாப்பு செய்யலாம். இனக்கவர்ச்சிப் பொறிகளை பயன்படுத்தலாம். பயிர் பாதுகாப்பு செய்யும்போது நன்மை செய்யும் பூச்சிகளை பாதுகாக்க வேண்டும். விவசாயிகள் தேவையின் அடிப்படையில் மட்டும்தான் பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்த வேண்டும். விவசாயிகள் பயிர் பாதுகாப்பில் சமுதாய இயக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும். இவர்கள் வயலில் எலிகளை அழிக்க பயிர் அறுவடை செய்தபின் வயலில் இறங்கி வரப்புகளை வெட்டி எலிகளை பிடித்து அழித்துவிடலாம். விதை மற்றும் மண் மூலம் பரவும் நோய்களைத் தடுக்க விதைநேர்த்தி செய்து 24 மணி நேரம் கழித்து விதைக்க வேண்டும்.
பயிரைத் தாக்கும் குருத்துப்பூச்சி மற்றும் இலை சுருட்டுப் புழுக்களை அழிக்க வயலில் ஒட்டுண்ணியை விடலாம். ஒட்டுண்ணியின் பெயர் டிரைக்கோகிராமா ஜப்பானிக்கம். வயலில் நெற்பயிர் மேல் மரத்தின் நிழல் தொடர்ந்து இருந்துவந்தால் பயிர் இலை சுருட்டுப் புழுவால் பாதிக்கப்படும். நிழலைப் போக்க மரக்கிளையை வெட்டி அகற்றிவிட்டால் பிரச்னை தீர்ந்துவிடும். நெல் வயலில் திடமான குச்சிகளை நடவேண்டும். குச்சிகளின் தலைப்பாகம் பயிரின் உயரத்தைவிட அதிக உயரம் கொண்டிருக்க வேண்டும். குச்சியின் தலைப்பாகத்தில் துணிகளை நன்கு சுருட்டி கட்டி அவைகள் மெத்தைபோல் இருக்கச் செய்ய வேண்டும். இக்குச்சிகளை பரவலாக நெல்வயலில் நட்டுவிட்டால் அவைகளின் மேல் கோட்டான்கள் என்று அழைக்கப் படும் பறவைகள் இரவு நேரத்தில் வந்து உட்கார்ந்துகொள்ளும். இப்பறவைகளுக்கு இரவில் கூர்மையாக பார்க்கும் திறன் உள்ளது. இரவு நேரத்தில் பயிர்களின் இடைவெளியில் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டு இருக்கும் எலிகளை கோட்டான்கள் பறந்துசென்று பிடித்து குச்சிகளின்மேல் வந்து உட்கார்ந்துகொண்டு சாவகாசமாக தின்றுவிடும். சில சமயம் கோட்டான்கள் வயலில் உள்ள தவளையையும் பிடித்துத் தின்றுவிடும்.-எஸ்.எஸ்.நாகராஜன்

**காய்கறி விலையை சீராக வைத்த ஆடி**

ஆகஸ்ட் 03,2011,09:35



மதுரை : மதுரை மாட்டுத்தாவணி மார்க்கெட்டிற்கு காய்கறி வரத்து சீராக உள்ளதால், கடந்த வார விலையிலேயே இந்த வாரமும் விற்கப்படுகிறது. இதற்கு ஆடிமாதத்தில் முகூர்த்தநாட்கள் இல்லாததும் ஒரு காரணம்.நேற்றைய காய்கறி விலை குறித்து, சங்கத் தலைவர் முருகன் கூறியதாவது :ஒரு கிலோ தக்காளி ரூ.6 - ரூ.8, கத்தரிக்காய் 10-12, பூசணிக்காய் 5, வெண்டைக்காய் 12, புடலைங்காய் 5-7, கேரட் 20, பீட்ரூட் 10, நூக்கல் 10, உருளைகிழங்கு 10-15, சேனைகிழங்கு 20, கருணைகிழங்கு 25, வெங்காயம் 10, சிறியது 10-15, பாகற்காய் 18, சிறியது 25, இஞ்சி 20-25, பீன்ஸ் 20-25, பட்டர் பீன்ஸ் 30-35, சோயா பீன்ஸ் 30, முருங்கைக்காய் 20, அவரைக்காய் 15, கொத்தவரை 7, பச்சைமிளகாய் 15-18, கீரை வகைகள் 5-6, புதினா 10, கொத்தமல்லி 12, கறிவேப்பிலை 8, சவ்சவ் 15, முள்ளங்கி 9, முட்டைகோஸ் 5-7 ரூபாய்க்கு விற்கப்பட்டது, என்றார். இம்மார்க்கெட்டிற்கும், மற்ற இடங்களில் விற்கப்படும் காய்கறி விலைக்கும் சம்பந்தமில்லை.

**ஏப்ரல்-ஜூலை மாத காலத்தில்காபி ஏற்றுமதி 1.46 லட்சம் டன்னாக உயர்வு**

ஆகஸ்ட் 03,2011,02:10



புதுடில்லி:இந்தியாவின் காபி ஏற்றுமதி, நடப்பு நிதியாண்டின், ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான 4 மாத காலத்தில், 1 லட்சத்து 45 ஆயிரத்து 505 டன்னாக உயர்ந்துள்ளது. இது, கடந்த 2010-11ம் நிதியாண்டின், இதே காலத்தில், 1 லட்சத்து 5 ஆயிரத்து 345 டன்னாக இருந்தது. ஆக, காபி ஏற்றுமதி 38 சதவீதம் அதிகரித்துள்ளது. இது, சர்வதேச அளவில் காபிக்கான தேவை அதிகரித்து

வருவதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என, இந்திய காபி வாரியம் தெரிவித்துள்ளது.உலகளவில், காபி ஏற்றுமதியில் ஏற்பட்ட மந்த நிலையும், சர்வதேச அளவில் விலை உயர்ந்து வரு வதும் இந்திய காபி ஏற்றுமதியாளர்களுக்கு மிகவும் சாதகமாக உள்ளது. இதன் காரணமாகவே, மதிப்பு மற்றும் அளவின் அடிப்படையில் காபி ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது என, காபி வாரியத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நடப்பு நிதியாண்டின், ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான காலத்தில், மதிப்பின் அடிப்படையில், காபி ஏற்றுமதி, 1,977 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது,கடந்த நிதியாண்டின், இதே காலத் தில், 1,031 கோடி ரூபாயாக குறைந்திருந்தது.உள்நாட்டில், காபி விளைச்சல் அதிகரித்ததையடுத்து, சர்வதேச அள வில் அதிகரித்து வரும் இதன் தேவையை ஈடு செய்யும் அளவிற்கு, காபி ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இதனை நிரூபிக்கும் வகையில், கடந்த நிதியாண்டில், அளவின் அடிப்படையில், 3 லட்சத்து 2 ஆயிரம் டன்னாக இருந்த இதன் ஏற்றுமதி, நடப்பு நிதியாண்டில், 3 லட்சத்து 22 ஆயிரத்து 250 டன்னாக வளர்ச்சி கண்டுள்ளது.

காபி ஏற்று மதியில் ஈடுபட்டு வரும் பிரேசில் மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகளில், காபிக்கான தேவை அதிகரித்துள் ளது. இதனால் சர்வதேச சந்தையில் காபிக்கான தேவை அதிகரித்து வருகிறது. இது, இந்திய காபி ஏற்றுமதியாளர் களுக்கு சாதகமான அம்சமாக உள்ளது. காபி விலையும்,ஏற்றுமதியும் அதிகரித்துள்ளதால்,ஏற்றுமதியாளர்களின் லாப வரம்பு, சென்ற நிதியாண்டின் இதே காலத்தை விட, நடப்பாண்டில் கணிசமான அளவு உயர்ந்துள்ளது என, உயர திகாரி ஒருவர் கருத்து தெரிவித்தார்.ஏப்ரல்-ஜூலை வரையிலான நான்கு மாத காலத்தில், ஏற்றுமதி செய் யப் பட்ட ஒரு டன் காபி விலை சராசரியாக 1 லட்சத்து 35 ஆயிரத்து 897 ரூபாய் என்ற அளவில் இருந்தது.

இது, கடந்த நிதி யாண்டின், இதே காலத்தில், 97 ஆயிரத்து 922 ரூபாயாக இருந்தது.காபி பருவம் வரும் செப்டம்பர் மாதத்துடன் நிறை வடையவுள்ளது. இப்பருவத்தில், சென்ற ஜூலை வரையிலான முதல் பத்து மாதங்களில், இந்தியாவின் ஒட்டு மொத்த காபி ஏற்றுமதி, 3 லட்சத்து 11 ஆயிரத்து 798 டன்னாக வளர்ச்சி கண்டுள்ளது. இது, கடந்த காபி பருவத்தின், இதே மாதங்களில், 2 லட்சத்து 20 ஆயிரத்து 358 டன்னாக குறைந்து காணப் பட்டது.நம் நாட்டிலி ருந்து, இத்தாலி, ஜெர் மனி, பெல்ஜியம், ஸ்பெயின் மற்றும் ரஷ்ய கூட்டமைப்பு நாடுகளுக்கு அதிகளவில் காபி ஏற்றுமதி ஆகிறது.

**சம்பா பருவத்திற்கேற்ற புதிய நெல் கோ (ஆர்) 50**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2011,01:24 IST

திருவள்ளூர் : நடப்பு சம்பா பருவத்தில், கோ (ஆர்) 50 நெல் சாகுபடி செய்தால் கூடுதல் மகசூல் பெற்று பயனடையலாம் என, வேளாண் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து, திரூர் வேளாண்மை அறிவியல் நிலையத் தலைவர் தேவநாதன் மற்றும் பயிர் மரபியல் துறை உதவிப் பேராசிரியர் அர.மணிமாறன் கூறும் போது, ""திருவள்ளூர் மாவட்டத்தில் சம்பா பருவத்தில் வழக்கமாக ஏ.டீ.டி., 39 மற்றும் பி.பி.டி., 5204 ஆகிய நெல் ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இந்த ரகங்களில், பி.பி.டி., 5204 பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலால் பெரிதும் பாதிக்கப்பட்டு, மகசூல் இழப்பு ஏற்படுகிறது. நடுத்தர சன்ன ரகமான கோ (ஆர்) 50 நெல் ரகம், நல்ல அரவைத் திறனும், மிதமான அமைலோஸ் மாவுப் பொருள் உடையதால் சமைப்பதற்கும், இட்லி தயாரிப்பதற்கும் ஏற்றது. மேலும், குலை நோய், இலை உறை அழுகல் நோய், பழுப்புப் புள்ளி நோய், பாக்டீரியா இலைக் கருகல் நோய் மற்றும் துங்ரோ நோய் ஆகியவற்றிற்கு, மிதமான எதிர்ப்புத் திறன் கொண் டது. இதன் வயது 130 - 135 நாட்கள் ஆகும். சராசரி நெல் மகசூல் திறன் எக்டேருக்கு, 6,300 கிலோ. எனவே, நடப்பு சம்பா பருவத்தில் உழவர் பெருமக்கள் கோ (ஆர்) 50 நெல் சாகுபடி செய்து, கூடுதல் மகசூல் பெற்று பயனடையலாம்," என்று தெரிவித்தனர்.

**கால்நடை மருத்துவர்களுக்கான தேவை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2011,01:20 IST

சென்னை : ""கால்நடை மருத்துவர்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது," என, கால்நடை பராமரிப்புத் துறை இயக்குனர் பழனிசாமி பேசினார். உலகின் முதல் கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டு, 250 ஆண்டுகள் நிறைவு பெறுவதை ஒட்டி, 2011ம் ஆண்டை உலக கால்நடை ஆண்டாக அங்கீகரித்து, உலகம் முழுக்க கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம், கால்நடை மருத்துவக் கல்லூரியில், அறிவியல் கண்காட்சியை, கடந்த 29ந் தேதி முதல் ஆகஸ்ட் முதல் நாள் வரை நடத்தியது.
இக்கண்காட்சியில், செல்லப் பிராணிகளின் அணிவகுப்பு, வண்ண வண்ண மீன்களின் கண்காட்சி நடந்தது. இதன் நிறைவு விழாவில், தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகத்தின் பதிவாளர் பாலசந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார். துணைவேந்தர் பிரபாகரன் தலைமை தாங்கி பேசிய போது, ""கால்நடை ஆண்டு விழாவை இவ்வளவு சிறப்பாக நடந்திய பெருமை மாணவர்களைச் சாரும்.

கண்காட்சிக்கு தேவையானவற்றை, உடனடியாக கொண்டு வந்து, மிக அழகாக காட்சிப்படுத்தியதில், அவர்களுக்கு பெரும் பங்கு உண்டு," என்று பாராட்டினார். கால்நடை பராமரிப்புத் துறையின் இயக்குனர் பழனிசாமி வாழ்த்திப் பேசும்போது,""கடந்த நான்கு நாட்கள் நடைபெற்ற செல்லப் பிராணிகள், மீன்கள் கண்காட்சியில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், பணியாளர்கள் என, 64 ஆயிரம் பேர் கலந்து கொண்டது மிகப்பெரிய சாதனை. சமீப காலமாக கால்நடை உயிர்களை மதிக்கின்ற போக்கு நம்மிடையே வளர்ந்து வருவதால், கால்நடை மருத்துவர்களுக்கான தேவையும் அதிகரித்து வருகிறது. இங்கிருந்து மருத்துவராக உருவாகுகிறவர்கள், மனிதர்களைப் போலவே கால்நடை உயிர்களையும் மதித்து, சிகிச்சை அளிக்க வேண்டும். பிற உயிர்களை மதிக்கிற மனப்பான்மை நமக்கு தொன்றுதொட்டு இருந்தாலும், கால்நடைகள் மீதான விழிப்புணர்வு இன்னும் அதிகரிக்க வேண்டும்," என்றார்.

பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட ஓவியப் போட்டி, வினாடி - வினா போட்டி, கட்டுரைப் போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், சமையல் போட்டியில் வெற்றி பெற்ற பொதுமக்களுக்கும், மீன்வளத் துறையின் கமிஷனர் சந்திரகாந்த் பி.காம்ளே பரிசுகள் வழங்கி, பாராட்டிப் பேசும் போது, ""கால்நடைகள் குறித்த விழிப்புணர்வு மாணவர்களிடம் அதிகரிக்க வேண்டும். அதை நோக்கமாகக் கொண்டு தான், மாணவர்களுக்கு இத்தகைய போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதற்காகவே, பல்வேறு தனித்தனி கண்காட்சிகளும் நடத்தப்பட்டன. நன்னீர் மீன்களில், குட்டி போடும் மீன்களான பிளாட்டி, கப்பீஸ் மற்றும் மோலீஸ் மீன்களை, பலர் பார்த்திருக்க மாட்டார்கள். முட்டையிடும் மீன்களான டெட்ரா, பொன்மீன், கோய், கௌராமி, ஏஞ்சல் போன்ற பலவகை வண்ண மீன்களை காட்சிக்கு வைத்ததே, அது குறித்து மாணவர்களும், பொதுமக்களும் விழிப்புணர்வு அடைய வேண்டும் என்பதற்குத் தான்," என்றார். பால்வளத் துறையின் ஆணையர் மற்றும் ஆவின் மேலாண்மை இயக்குனர் எம்.ஆர்.மோகன், ராஜஸ்தான் மாநில கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் அஜய்குமார் கோலட் ஆகியோரும் பேசினர். கால்நடை உற்பத்தி கல்வி மையத்தின் இயக்குனர் தியாகராஜன் நன்றி கூறினார்.

**விவசாயத்தை மேம்படுத்த பட்ஜெட்டில் புதிய திட்டங்கள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2011,03:18 IST

சேலம்: ""நலிவடைந்து கிடக்கும் விவசாயத்தையும், மின்சார தட்டுப்பாட்டையும் போக்க, தமிழக பட்ஜெட்டில் புதிய அறிவிப்புகள் வெளியாகும்," என, சேலத்தில் வேளாண் அமைச்சர்

செங்கோட்டையன் தெரிவித்தார்.சேலம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், விவசாயிகளுடனான கலந்துரையாடல் கூட்டம் நடந்தது. மாவட்ட கலெக்டர் மகரபூஷணம் தலைமை வகித்தார். தமிழக வேளாண் அமைச்சர் செங்கோட்டையன், நெடுஞ்சாலை அமைச்சர் இடைப்பாடி பழனிசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.விவசாயிகள் பேசியதாவது: விவசாயத்துக்கு தண்ணீர் தட்டுப்பாடு அதிகம் உள்ளது. கூலி ஆட்கள் பிரச்னை வேறு, தேசிய ஊரக வேலையளிப்பு திட்டத்தால், பலர் விவசாய கூலிக்கு வருவதில்லை. மற்றவை போன்று இதற்கு அதிகப்படியாக கூலி கொடுக்க முடியாது. வேளாண் பல்கலையில், அறுவடை இயந்திரங்கள் பல உள்ளன. அவற்றை கொண்டு, ஆட்கள் பிரச்னை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.பூக்கள், காய்கறிகள், பழங்கள் அதிகப்படியாக விலையும் மாவட்டம் இது. அவற்றை விற்பனை செய்வதற்கென தனியாக மார்க்கெட் அமைக்கப்பட வேண்டும்.

பூக்களை பாதுகாக்க குளிர்பதன கிடங்கும், பழங்களுக்கான ஜூஸ் பேக்டரியும் அமைக்க வேண்டும்.நிலத்தின் தன்மை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. தண்ணீரும் தரமானதாக இல்லை. மண் வளத்தை பாதுகாக்க வேண்டும். பிரபலமான பெங்களூரா மாம்பலம், விராலி மஞ்சள் போன்றவை சேலத்திற்கு உரியது. அவற்றிற்கு, பிராண்டட் இமேஜ் கொடுக்க வேண்டும். பாக்கு தோப்பு இம்மாவட்டத்தில் அதிகம் உள்ளது. அதற்குரிய மண்வளத்தை கொடுக்க வேண்டும் என்பதற்காக, மண் வெட்டி எடுக்கப்படுகிறது. அதற்கு தடை விதிக்கின்றனர். மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை விற்பனை செய்ய வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஆத்தூர் பகுதியில் வேளாண் தொடர்பான பயிற்சி மையம் அமைக்கப்பட வேண்டும். மரவள்ளி கிழங்கில் பூச்சி தாக்குதல் அதிகம் உள்ளது. அவற்றை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும். ஆத்தூர், தலைவாசல் பகுதியில் பருத்தி, பாக்கு விற்பனை மையங்கள் அமைக்க வேண்டும். சர்க்கரை ஆலை ஒன்றும் நிறுவ வேண்டும். சேலம் மாநகரில், விவசாயிகள் விளைபொருட்களை விற்பனை செய்ய இடமில்லை. மூடிகிடக்கும் கூட்டுறவு நூற்பாலையை அதற்கு பயன்படுத்தலாம். கோயம்பேடு மார்க்கெட் போல், சேலத்திலும் ஒரு பெரிய மார்க்கெட் அமைய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.வேளாண் அமைச்சர் செங்கோட்டையன் பேசியதாவது: விவசாயிகள் ஒரு பொருளை உற்பத்தி செய்து, அதை விற்க ஐந்து பேரை கடந்து செல்ல வேண்டிய நிலை உள்ளது. அவற்றை போக்க, விற்பவர், வாங்குபவர் என்ற இரண்டு முறையை கொண்டு வர முதல்வர் முயற்சி மேற்கொண்டுள்ளார்.

மரவள்ளி கிழங்கில் நோய் தாக்குதல் குறித்து கலெக்டரிடம் தெரிவித்தால், வேளாண் பல்கலையில் இருந்து ஆய்வாளர்கள் நேரடியாக பார்வையிட்டு நடவடிக்கை எடுப்பர்.நீர் வளத்தை பாதுகாக்கவும், தண்ணீரை தேக்கி வைக்கவும் தடுப்பணைகள் அமைக்கப்படுகிறது.

இதற்காக, 35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியில், ஒரு லட்சத்து, 2,000 கோடி வரை கடன் வைத்துள்ளனர். மின்சார தட்டுப்பாட்டை போக்க, 57 ஆயிரம் கோடி வரை, மின்வாரியத்துக்கு கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவை, வேளாண் பயன்பாட்டுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. வரும் பட்ஜெட்டில், விவசாயம், மின்சாரத்தை மேம்படுத்துவதற்கான புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட உள்ளது. பூச்சி மருந்துகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்படலாம். இனி வரும் காலங்களில், விவசாயிகள் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் அரசால் மேற்கொள்ளப்படும்.இவ்வாறு அவர் பேசினார்.
வேளாண்துறை கமிஷனர் சந்தீப்சக்சேனா, விற்பனை மற்றும் வணிக கமிஷனர் தங்க கலியபெருமாள், தோட்டக்கலைத்துறை கமிஷனர் செல்லமுத்து, எம்.எல்.ஏ.,க்கள் தோப்புவெங்கடாசலம், செல்வராஜ், விஜயலட்சுமி, செல்வம், மாதேஸ்வரன், வெங்கடாசலம், பெருமாள், பல்பாக்கிகிருஷ்ணன், வேளாண் இணை இயக்குனர் விஜயகுமார் மற்றும் அதிகாரிகள், விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**ஏற்காடு காஃபி விவசாயிகளுக்கு ரூ.1 கோடி மானியத்துடன் கடனுதவி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2011,03:09 IST

சேலம்: "ஏற்காடு, கொல்லிமலை காஃபி தோட்ட விவசாயிகள், தொழில் அபிவிருத்திக்காக, 50 சதவீத மானியத்துடன், ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை அரசு அமல்படுத்தியுள்ளது. விருப்பமுள்ள விவசாயிகள் மானியத்துடன் நவீன தொழில்நுட்ப உபகரணங்களை வாங்கி பயன்பெறலாம்' என, முதுநிலை செய்தி தொடர்பு அலுவலர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.இந்திய அளவில் காஃபி உற்பத்தி தொழில் அமோகமாக நடந்து வருகிறது. மேற்கு தொடர்ச்சி மலையான ஏற்காடு, சேர்வராயன் மலை, கொல்லிமலைப்பகுதியில் அதிகளவு காஃபி விவசாயிகள் உள்ளனர். ஏற்காட்டில், 5,100 ஹெக்டேர் பரப்பளவில் காஃபி பயிரிடப்பட்டுள்ளது.

ஆண்டுக்கு சராசரியாக, 3,000 முதல், 3,500 டன் வரை காஃபி உற்பத்தி செய்யப்படுகிறது. காஃபி தோட்ட தொழிலில், 2,197 விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இதில், 2,000 விவசாயிகள் பழங்குடியினர்.கொல்லிமலையில், 650 ஹெக்டேர் நிலப்பரப்பளவில் காஃபி விவசாயம் நடந்து வருகிறது. ஆண்டுக்கு சராசரியாக, 400 டன் முதல், 500 டன் வரை காஃபி உற்பத்தி செய்யப்படுகிறது.

உயரம் குறைந்த மலைபகுதியில் காஃபி விவசாயம் நடந்து வருகிறது. காஃபி தோட்டத்தில் ஊடுபயிராக மிளகு வளர்க்கப்படுவதால், விசாயிகள் இரட்டிப்பு லாபம் ஈட்ட ஏதுவாக

அமைந்துள்ளது. இந்தியாவில் பயிராகும் காஃபி சர்வதேச அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.இந்தியாவில், கடந்த ஆண்டை விட, இந்தாண்டு காஃபி விளைச்சல் கூடுதலாக இருக்கும் என, விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். இந்தியாவில் ஆண்டு தோறும், 3 லட்சம் டன், காஃபி உற்பத்தி செய்யப்படுகிறது.

இதில், 2.2 லட்சம் டன் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தியாவில், காஃபி ஏற்றுமதி மூலம் ஆண்டுக்கு, 2,500 கோடி ரூபாய் அன்னிய செலாவணி ஈட்டப்படுகிறது.காஃபி தொழிலை மேம்படுத்த விவசாயிகளுக்கு மானிய கடனுதவி திட்டம் மூலம் நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.காஃபி போர்டு முதுநிலை செய்தி தொடர்பு அலுவலர் பெரியசாமி கூறியதாவது:
காஃபி உற்பத்தி தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு, 50 சதவீத மானிய கடனுதவியில் நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்கப்படுகிறது. காஃபி தோட்டத்தில் பயன்படுத்தக்கூடிய, களை எடுக்கும் இயந்திரம், குழி பறிக்கும் இயந்திரம் மற்றும் மர அறுப்பு மிஷின் ஆகியவை, மானிய கடனுதவி திட்டம் மூலம் காஃபி தோட்ட விவசாயிகள் வாங்கலாம்.கடந்த ஆண்டு, 16 லட்சம் ரூபாய் மதிப்பிலான நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் வாங்க, காஃபி தோட்ட விவசாயிகளுக்கு கடனுதவி வழங்கப்பட்டது.

இதில் எட்டு லட்சம் ரூபாய், அரசு மானியமாக வழங்கியுள்ளது. இந்தாண்டு, 2 கோடி ரூபாய் மதிப்பிலான நவீனதொழில் நுட்ப உபகரணங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், ஒரு கோடி ரூபாய் மானிய கடனுதவி திட்டம் மூலம், காஃபி தோட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. இந்த அரிய வாய்ப்பை காஃபி தோட்ட விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**மேட்டூர் அணையில்நீர் திறப்பு குறைப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2011,03:13 IST

மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து, டெல்டா பாசனத்துக்கான நீர் திறப்பு நேற்று மாலை 6 மணி முதல் விநாடிக்கு, 13 ஆயிரத்து 500 கன அடியாக குறைக்கப்பட்டது.
மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு, கடந்த 28ம் தேதி முதல் விநாடிக்கு, 16 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் குறைந்ததால், நேற்று அணை நீர்வரத்து விநாடிக்கு, 5,546 கனஅடியாக குறைந்தது.நீர்வரத்து மளமளவென சரிந்ததால், டெல்டா பாசனத்துக்கான நீர் திறப்பு ஆகஸ்ட் 1ம் தேதி விநாடிக்கு, 15

ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது. டெல்டா பாசன பகுதியில் குறுவை நடவு நிறைவடைந்ததால், பாசனத்துக்கான நீர் தேவை குறைந்தது. அதனால், நேற்று மாலை 6 மணி முதல் நீர்திறப்பு விநாடிக்கு, 13 ஆயிரத்து 500 கனஅடியாக குறைக்கப்பட்டது.

**வனத்துறை மூலம் இயற்கை உரங்கள் விற்பனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2011,01:27 IST

தர்மபுரி:தர்மபுரி மாவட்ட வனத்துறை மூலம் உயிர் உரங்கள் தயார் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. மண் வளத்தை பாதுகாக்க வனத்துறை மூலம் ஒகேனக்கல் ஆடிப்பெருக்கு விழா கண்காட்சி அரங்கிலும் இயற்கை உர விற்பனை நடந்து வருகிறது.ரசாயன உரங்கள் மற்றும் ரசாயன பூச்சி கொல்லிகளை பயன்படுத்துவதால் நன்மை செய்யும் பூச்சிகள் அழிக்கப்பட்டு மண் வளம் பாதிக்கப்படுகிறது. காற்று, நீர் ஆகியவை மாசு அடைகின்றன. தாவரங்கள் நோய் எதிர்ப்பு திறனை இழந்து மரக்கன்றுகள் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பில் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது.ரசாயன உரங்கள் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள் பயன்பாட்டினால், நாம் உண்ணும் உணவு பொருட்களில் நஞ்சு தன்மை அதிகரித்து மனிதனுக்கு பல்வேறு நோய்களையும், நோய் எதிர்ப்பு தன்மை குறைவு மற்றும் தாய் பாலில் கூட விஷத்தன்மை ஏற்பட்டுள்ளது என கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கிராம பகுதியில் மாட்டு சாணம், வீடுகளில் சேரும் சாம்பல், குப்பை கழிவுகள் ஆகியவற்றை குப்பை தொட்டிகள் அமைத்து சேகரித்து அவற்றை ஆண்டுதோறும் நிலங்களில் இட்டு, நிலத்தை சீர் செய்து விவசாயம் செய்து வந்தனர். தற்போது, இயற்கை உரங்கள் பயன்பாடு குறைந்து விட்டது. மேலும் மாட்டு சாணங்கள் சேகரிப்பும் குறைந்து வருகிறது.விவசாயிகள் காற்று, நீர் மற்றும் நில மாசுவை தவிர்க்கும் வகையில் தர்மபுரி நவீன நாற்றாங்கால் கோட்டத்தில் உயிர் உர உற்பத்தி கூடம் அமைக்கப்பட்டு இயற்கை உரங்கள் தயார் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.உயிர் உரங்கள் காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து கொடுக்கின்றன, மண்ணில் கரையாத நிலையில் உள்ள மணிச்சத்தை கரைத்து பயிருக்கு எளிதில் கிடைக்க செய்கிறது. இதனால், மண் வளம் பெருகுவதுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் மண்ணில் நுண்ணுயிர்கள் உற்பத்தியும் பெருக காரணமாகிறது.தர்மபுரி வனத்துறை சார்பில் நுண்ணுயிர் உற்பத்தி மற்றும் ஆய்வு பணி கடந்த 2000ம் ஆண்டு முதல் நடந்து வருகிறது. அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியா, ரைசோமியியம், வேர் உட்பூசணம் போன்ற நுண்ணியர் உரங்களை நோய் எதிர்ப்பு பயிர்களான ட்ரைகோடர்மா விரிடி, சூடோமோனஸ், ப்ளோரசன்ஸ் ஆகியவற்றை தயாரித்து விவசாயிகளுக்கு குறைந்த விலையில்

விற்பனை செய்து வருகின்றனர்.* அசோஸ்பைரில்லம்: தாவரங்களின் வளர்ச்சிக்கு தழைச்சத்து, மணி சத்து போன்றவை மிகவும் இன்றியமையாதவை. ரசாயன உர தழை சத்தை பயன்படுத்தும் போது, பாதி அமோனியா வாயு நிலையும், பாதி கØராத நிலையைம் அடைவதால் பயிருக்கு குறைந்த அளவே தழைச்சத்து கிடைக்கும்.இயற்கையில் காற்றில் 80 சதவீதம் தழைச்சத்து உள்ளது.

இவற்றை அசோஸ்பைரில்லாம், லிப்ரோபெரம், அசோஸ்பைரில்லம் பிராசிலேன்சி போன்ற நுண்ணுயிர்கள் கிரகித்து பயிருக்கு எளிதில் கிடைக்க செய்கின்றன.* ரைசோபியம்: இது லெகூம் வகை தாவரங்களில் வேர் முடிச்சுகளில் கூட்டு வாழ்க்கை நடத்தும் நுண்ணுயிர் ஆகும். இதில், பிராடிசோபியம் ஐப்போனிக்கம் போன்ற நுண்ணுயிர்கள் வனப்பயிர்களான வெள்வேல், கருவேல், சிகப்பு சந்தனம், ஈட்டி போன்ற தாவரங்களின் வேர் முடிச்சுகளில் இருந்து காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து பயிருக்கு எளிதில் கிடைக்கு செய்யும்.* பாஸ்போபக்டீரியா: மண்ணில் கரையாத நிலையில் உள்ள மணிசத்தை கரைத்து கொடுக்கும் நுண்ணுயிர்களான பேசில்லஸ் மெகாடீரியம், பேசில்லஸ் பாலிமிக்ஸா போன்ற நுண்ணுயிர்கள் பார்மிக் அமிலம், அசிடிக் அமிலம், லாக்டிக் அமிலம் மற்றும் சச்சீனிக் அமிலம் போன்றவை சுரத்து மண்ணில் கரையாத நிலையில் உள்ள ராக்பாஸ்பேட்டை கரைய செய்து பயிருக்கு எளிதில் கிடைக்க செய்கிறது. இதனால், தாவரங்களின் வேர் மற்றும் தண்டு வளர்ச்சி அதிகரிப்பதுடன் இயற்கையில் நோய் எதிர்ப்பு தன்மை பெற்றுத்தருகிறது.வனத்துறை மூலம் மண் புழு உரங்கள் கிலோ 4 ரூ÷ய்க்கும், அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போபக்டீரியா ஆகிய உயிர் உரங்கள் கிலோ 14 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகள் இயற்கை மற்றும் உயரி�னூ உரங்களை வாங்கி மண் வளத்தை பாதுகாக்கலாம். ஒகேனக்கல் ஆடிப்பெருக்கு விழா கண்காட்சியில் வனத்துறை அரங்கில் உயிர் உரங்கள் விற்பனைக்கும், காட்சிக்கும், அதன் பயன் குறித்த விளக்கமும் அளிக்கப்பட்டு வருகிறது.

**ஓசூரில் நடமாடும் பட்டுக்கூடு அங்காடி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2011,01:02 IST

ஓசூர்: ஓசூர் தாலுகாவில் உற்பத்தியாகும் 50 சதவீதம் பட்டு கூடுகளை விவசாயிகள் கர்நாடகாவில் விற்பனை செய்ய எடுத்து செல்வதால், தமிழக அரசுக்கு கிடைக்கும் விற்பனை வரி வருவாய் நஷ்டமடைந்து வந்தது. இதை தடுக்க நடமாடும் பட்டு கூடு அங்காடி துவக்கப்பட்டுள்ளது.தமிழகத்தில் கிருஷ்ணகிரி, ஈரோடு, சேலம், நெல்லை, கன்னியாகுமரி, வேலூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் பட்டு கூடு உற்பத்தி அதிகளவில் நடக்கிறது.

இவற்றில் ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில் தமிழகத்தில் அதிகளவு பட்டு கூடு உற்பத்தியாகிறது.தமிழகத்தில் உற்பத்தியாகும் 50 சதவீதம் பட்டு கூடுகள், ஓசூர், தேன்கனிக்கோட்டை பகுதியில்தான் உற்ப்த்தியாகிறது. குறிப்பாக ஓசூரில் உற்பத்தியாகும் ஒரு பட்டு கூட்டில் 1,500 மீட்டர் பட்டு நூல் தயார் செய்ய கூடிய நல்ல தரம் காணப்படுவதால், கர்நாடகா மற்றும் தமிழகத்தின் பிற மாவட்ட பட்டு நூல்பாலை வியாபாரிகள் மத்தியில் ஓசூர் பட்டுக்கூடுகளுக்கு நல்ல வரவேற்பு உண்டு.

ஓசூர் பகுதியில் அதிகளவு பட்டுக்கூடுகள் உற்பத்தியானாலும், இங்கு பட்டு நூல் தயார் செய்யக்கூடிய பட்டுநூல் ரீலிங் யூனிட்டுகள் குறைவாக காணப்படுகிறது. அதனால், விவசாயிகள் பட்டுக்கூடுகளை கர்நாடகா, தர்மபுரி, சேலம் மற்றும் வேலூார் பட்டுக்கூடு அங்காடிகளுக்கு விற்பனை செய்ய எடுத்து செல்கின்றனர்.குறிப்பாக ஓசூர் பகுதியில் உற்பத்தியாகும் 50 சதவீதம் பட்டுக்கூடுகள் கர்நாடகாவுக்கு எடுத்து செல்லப்படுவதால், தமிழக அரசுக்கு விற்பனை வரி மூலம் கிடைக்கும் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.ஓசூர் பகுதியில் உற்பத்தியாகும் பட்டுக்கூடுகளை கர்நாடகா மற்றும் தமிழகத்தின் பிற மாவட்ட பட்டுக்கூடு அங்காடிகளுக்கு கொண்டு செல்வதை தடுக்கவும், ஓசூர் பட்டுக்கூடு அங்காடியிலே விற்பனை செய்யவும், விவசாயிகளுக்கு, வியாபாரிகளுக்கும் நியாயமான விலை கிடைக்கவும் பட்டுவளர்ச்சித்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.கர்நாடகா, வேலூார், ஆரணி உள்ளிட்ட பிற மாநில, மாவட்டங்களை சேர்ந்த பட்டு நூல் வியாபாரிகளை ஓசூர் அழைத்து வந்து விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்வதற்கு நடமாடும் பட்டுக்கூடு அங்காடி என்ற புதிய விற்பனையை செயல்படுத்தி வருகின்றனர்.

இந்த நடமாடும் பட்டுக்கூடு அங்காடி முறையில் பட்டுக்கூடு அங்காடி அலுவலர்கள் நேரடியாக வியாபாரிகளை விவசாயிகளுடைய பட்டுக்கூடு தயாரிப்பு மையத்திற்கு அழைத்து சென்று விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் கட்டுப்படியான விலை கிடைக்கும் வகையில் பட்டுக்கூடுகள் விற்பனை செய்கின்றனர்.இந்த எளிய முறையால் விவசாயிகளுக்கு பட்டுக்கூடுகளை எடுத்து வரும் போக்குவரத்து செலவு, அலைச்சல் ஆகியவை மிச்சமாகிறது. கூடுதல் வருவாயும் கிடைப்பதால், நடமாடும் பட்டுக்கூடு அங்காடி விவசாயிகள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது. அதனால், தற்போது ஓசூர் பட்டுக்கூடு அங்காடியில் பட்டுக்கூடு விற்பனை அதிகரித்துள்ளது.இது குறித்து ஓசூர் பட்டுக்கூடு அங்காடி அதிகாரி ஜெயக்குமார் கூறியதாவது:நடமாடும் பட்டுக்கூடு அங்காடி மூலம் நேரடியாக சென்று பட்டுக்கூடுகளை கொள்முதல் செய்யும் நடைமுறை செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய எளிய அணுகுறை வியாபாரத்தால் ஓசூர் பட்டுக்கூடு அங்காடியின் விற்பனை இலக்கு அதிகரித்துள்ளது. நடப்பாண்டு 2 லட்சம் கிலோ பட்டுக்கூடுகளை விற்பனை செய்ய அரசு இலக்கு நிர்ணயித்தது.

அந்த வகையில் கடந்த மூன்று மாதத்தில் மட்டும் 34,000 கிலோ பட்டுக்கூடுகள் விற்பனை இலக்கை தாண்டி விட்டோம்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**பசுந்தாள் உரம் விதை மானியத்தில் விநியோகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2011,03:48 IST

கோபிசெட்டிபாளையம்: ""கோபி வேளாண்மை விரிவாக்க மையத்தில் 50 சதவீத மானிய விலையில் பசுந்தாள் உரம் விதைகள் விநியோகம் செய்யப்படுகிறது.
வேளாண் உதவி இயக்குனர் ஆசைத்தம்பி கூறியதாவது:இயற்கை உரங்களில் மிகவும் எளிதாகவும், குறைந்த செலவிலும் கிடைக்கக் கூடியது பசுந்தாள் உரம். இயற்கை உரங்கள் மண்ணில் காற்றோட்டத்தை அதிகரிக்கின்றன. மழை நீரை மண்ணில் சேமித்து, நீர் உறிஞ்சும் தன்மையை மேம்படுத்துகின்றன. பயிர் வளர்ச்சிக்கு தேவையான தழை, மணி, சாம்பல் சத்துகள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களையும் கொடுக்கின்றன. ரசாயன உரங்களை, தொடர்ந்து அளவுக்கு அதிகமாக மண்ணில் இடுவதால் மண் வளம் பாதிப்படைந்து பயிர் வளர்ச்சியும், மகசூலும் குறைந்து, இடுபொருள் செலவும் அதிகரிக்கிறது.தமிழகத்துக்கு ஏற்ற பசுந்தாள் உரப் பயிர்களில் தக்கைப் பூண்டு முக்கிய இடம் வகிக்கிறது. தக்கைப் பூண்டை தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் பயிர்செய்தால் மண்ணின் களர் தன்மை குறைகிறது. ஏக்கருக்கு 15 கிலோ விதை போதுமானது. மூன்று முதல் ஆறு மாதங்களில் ஏக்கருக்கு 4.5 டன் முதல் எட்டு டன்கள் வரை பசுந்தழை கிடைக்கும். அதை மடக்கி மண்ணில் இட்டு உழுவதால் விரைவில் மட்கி மண் வளம் பெருகுகிறது.தக்கைப் பூண்டு விதைகள் கோபி வேளாண் விரிவாக்க மையத்தில் 50 சதவீத மானிய விலையில் கிலோ 21 ரூபாய்க்கு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. 1,800 கிலோ விதை இருப்பு உள்ளதால் தேவைப்படும் விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம்.
இவ்வாறு அவர் கூறினார்.

**"பர்ரி ரக பேரீச்சை பயிரிட்டால் ஏக்கருக்கு ரூ.10 லட்சம் லாபம்'**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2011,02:01 IST

அவிநாசி : ""புதிய ரக பேரீச்சையான "பர்ரி' வகைகளை விவசாயிகள் பயிரிட்டு அதிக லாபம் ஈட்டலாம்," என்று மத்திய தென்னை வளர்ச்சி வாரிய தலைவர் செல்லமுத்து வலியுறுத்தினார்.
அவிநாசி அருகே முருகம்பாளையத்தை சேர்ந்தவர் முருகவேல்; விவசாயி. தனது தோட்டத்தில் திசு வளர்ப்பு மூலம் உருவாக்கப்பட்ட நாற்றுகளை நட்டு, "பர்ரி' ரக பேரீச்சை மரங்களை பயிரிட்டுள்

ளார். தற்போது அறுவடை செய்து, விற்பனையும் செய்து வருகிறார். தமிழகத்திலேயே இரண்டாவது விவசாயியாக முருகவேல், அரபு நாடுகளில் மட்டுமே விளையும் அவ்வகை பேரீச்சை ரகத்தை விளைவித்து சாதனை படைத்துள்ளார். அந்த தோட்டத்தை நேற்று பார்வையிட்ட மத்திய தென்னை வளர்ச்சி வாரிய தலைவர் செல்லமுத்து கூறுகையில், ""புதிய ரக "பர்ரி' பேரீச்சை மரங்களை பாதுகாப்புடன் பயிரிட்டால் ஏக்கருக்கு 10 லட்சம் ரூபாய் வரை லாபம் ஈட்டலாம். ரசாயன மருந்துகளை பயன்படுத்தாமல், முற்றிலும் இயற்கை உரங்களை பயன்படுத்தி முருகவேல், வெற்றிகரமாக விளைச்சல் கண்டுள்ளார். இதே வகையில், கொய்யா, பப்பாளி, சப்போட்டா ஆகிய வகைகளை பயிரிட்டால், கூடுதல் லாபம் கிடைக்கும்,'' என்றார்.திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்க துணைத் தலைவர் துரைசாமி உட்பட பலர் உடனிருந்தனர்.

**தேயிலைக்கு அரசு மானியத்தால் 80 சதவீத விவசாயிகளுக்கு பயனில்லை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2011,01:08 IST

மஞ்சூர் : தேயிலைக்கு அரசு வழங்கும் மானியத்தால் 80 சதவீத விவசாயிகளுக்கு பயனில்லை. தனியார் தொழிற்சாலைக்கு "சப்ளை' செய்யும் சிறு தேயிலை விவசாயிகளுக்கும் மானியம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்தால் மட்டுமே, விவசாயிகள் முழுமையாக பயனடைய முடியும். நீலகிரி மாவட்டத்தில் 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறு, குறு விவசாயிகள் தேயிலை விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் 200க்கு மேற்பட்ட தனியார் தொழிற்சாலைகள், 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் 22 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் அங்கத்தினர்களாக உள்ளனர். மாவட்டத்தில் உள்ள தேயிலை விவசாயிகளில் 20 சதவீதத்தினர் மட்டுமே கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைக்கு பசுந்தேயிலை சப்ளை செய்கின்றனர்; 80 சதவீதத்தினர் தனியார் தேயிலை தொழிற்சாலைக்கு சப்ளை செய்து வருகின்றனர். குந்தா பகுதியை தவிர, மாவட்டத்தில் மற்ற அனைத்து பகுதிகளிலும் உள்ள தேயிலை விவசாயிகள் தனியார் தொழிற்சாலைக்கு அதிகளவில் பசுந்தேயிலை சப்ளை செய்கின்றனர். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை மேம்படுத்தும் வகையில், அதில் அங்கத்தினர்களாக உள்ள தேயிலை விவசாயிகளுக்கு கடந்த ஜூன் மாதத்திலிருந்து டிசம்பர் வரை பசுந்தேயிலை கிலோவுக்கு 2 ரூபாய் மானியம் வழங்க உத்தரவிட்டுள்ளது.இது கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை அங்கத்தினர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எனினும், மாவட்டத்தில் உள்ள 80 சதவீத தேயிலை விவசாயிகள் தனியார் தொழிற்சாலைக்கு சப்ளை செய்வதால்,இந்த மானியம் கிடைப்பதில்லை. நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு தொழிற்சாலை மற்றும் தனியார் தொழிற்சாலைக்கு பசுந்தேயிலை சப்ளை செய்யும் விவசாயிகள் பயனடையும் வகையில்,

அனைவருக்கும் மானியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஐ.என்.டி.யு.சி., மாவட்ட தலைவர் மஞ்சைமோகன் கூறுகையில், ""கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை அங்கத்தினர்களுக்கு, பசுந்தேயிலை கிலோவுக்கு இரண்டு ரூபாய் மானியம் அறிவித்திருப்பது, வரவேற்கத்தக்கது. அதே சமயத்தில், தனியார் தொழிற்சாலைக்கு சப்ளை செய்து வரும் 80 சதவீத விவசாயிகளுக்கும் மானியம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என்றார்.

**காய்கறி விலையை சீராக வைத்த ஆடி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2011,00:56 IST

மதுரை : மதுரை மாட்டுத்தாவணி மார்க்கெட்டிற்கு காய்கறி வரத்து சீராக உள்ளதால், கடந்த வார விலையிலேயே இந்த வாரமும் விற்கப்படுகிறது. இதற்கு ஆடிமாதத்தில் முகூர்த்தநாட்கள் இல்லாததும் ஒரு காரணம்.நேற்றைய காய்கறி விலை குறித்து, சங்கத் தலைவர் முருகன் கூறியதாவது :ஒரு கிலோ தக்காளி ரூ.6 - ரூ.8, கத்தரிக்காய் 10-12, பூசணிக்காய் 5, வெண்டைக்காய் 12, புடலைங்காய் 5-7, கேரட் 20, பீட்ரூட் 10, நூக்கல் 10, உருளைகிழங்கு 10-15, சேனைகிழங்கு 20, கருணைகிழங்கு 25, வெங்காயம் 10, சிறியது 10-15, பாகற்காய் 18, சிறியது 25, இஞ்சி 20-25, பீன்ஸ் 20-25, பட்டர் பீன்ஸ் 30-35, சோயா பீன்ஸ் 30, முருங்கைக்காய் 20, அவரைக்காய் 15, கொத்தவரை 7, பச்சைமிளகாய் 15-18, கீரை வகைகள் 5-6, புதினா 10, கொத்தமல்லி 12, கறிவேப்பிலை 8, சவ்சவ் 15, முள்ளங்கி 9, முட்டைகோஸ் 5-7 ரூபாய்க்கு விற்கப்பட்டது, என்றார். இம்மார்க்கெட்டிற்கும், மற்ற இடங்களில் விற்கப்படும் காய்கறி விலைக்கும் சம்பந்தமில்லை.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## நீலகிரி மாவட்ட விவசாயிகள் இயற்கை உரங்களை பயன்படுத்த வேண்டும் பயிற்சி முகாமில் தகவல்



ஊட்டி தோட்டக்கலை துறை அரங்கில் நேற்று நடந்த பயிற்சியில் விவசாயி ஒருவருக்கு முட்டைகோஸ் பயிர் குறித்த பொருட்கள் வழங்கப்பட்ட போது எடுத்த படம்.

*ஊட்டி, ஆக.3–*

*நீலகிரி மாவட்ட விவசாயிகள் இயற்கை உரங்களை பயன்படுத்த வேண்டும் என்று ஊட்டி வேளாண்மை பல் கலைக்கழக மைய தலைவரும், ஆராய்ச்சி யாளருமான செல்வராஜ் கூறினார்.*

*பயிற்சி*

*நீலகிரி மாவட்ட விவசாயி களுக்கு முட்டைகோஸ் மற்றும் மலை காய்கறிகள் பயிர் செய்வது குறித்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பயிற்சி நேற்று ஊட்டி தோட்டக்கலை அரங்கில் நடைபெற்றது.*

*இந்த பயிற்சிக்கு ஊட்டி தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் ஜெகதீஷ் தலைமை*

தாங்கினார். ஊட்டி வேளாண்மை பல்கலைக்கழக மைய தலைவரும், ஆராய்ச்சி யாளருமான செல்வராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, ஒருங் கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்து பேசும் போது கூறியதாவது:–

பூச்சி கொல்லி மருந்து

நீலகிரி மாவட்ட விவசாயி கள், உடல் பாதுகாப்புக்கும், தரமான விவசாய பொருட்கள் கிடைப்பதற்கும் விவசாயத்தில் ரசாயன உரங்களை பயன் படுத்தாமல், இயற்கை உரங் களை பயன்படுத்த வேண்டும். அதே போன்று இயற்கை பூச்சி கொல்லி மருந்துகளை பயன்படுத்த வேண்டும்.

நீலகிரி மாவட்ட மக்கள் பாரம்பரிய உணவு வகையான கோதுமை, ராகி போன்ற உணவு பொருட்களை பயன் படுத்த வேண்டும். இதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். அரிசி உணவை (சாதம்) குறைக்க வேண்டும்.

உணவு தேவைகள்

சர்க்கரை நோய் தாக்கம் இல்லாமல் இருக்கும் நீலகிரி விவசாயிகள் பொதுவாக படுகர் இன மக்கள். எனவே மற்றவர்களும் வீட்டின் அருகே காலியாக உள்ள இடத்தில் ராகி, கோதுமை, சாமை பயிர் செய்ய வேண்டும். இதனால் உணவு தேவைகளை பூர்த்தி செய்ய முடியும்.

இவ்வாறு அவர் கூறினார்.

பயிற்சி முகாமில் பூச்சியல் துறை வல்லுனர் டாக்டர் துரை, நுற்புழுவியல் துறை வல்லுனர் டாக்டர் ராம கிருஷ்ணன், பயிர் நோயில் துறை வல்லுனர் டாக்டர் ராஜேந்திரன், தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் பிரகாசம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இயற்கை உரங்கள் உள்பட முட்டை கோஸ் பயிருக்கான குறிப்புகள் ஆகியவை வழங்கப்பட்டது.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,860–2,930

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை
4,070–4,120

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
9,850–00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,600–00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின்(வரிஉள்பட) 2,013–00

**நல்லெண்ணெய்**

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 10,500–00
டின் (15கிலோ) 1,750–00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட)
11,100.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,850–00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,215.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,635.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட) 1,125.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி)
560–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஆக.2–

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 11,500 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 3,800 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 1,960 | 110.00 |
| துவரம்பருப்பு | ரூ. 5,200 | 58.00 |
| கடலைப்பருப்பு (பாம்பே) | ரூ. 3,300 | 38.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 6,400 | 73.00 |
| உளுந்தம்பருப்பு (வெள்ளை) | ரூ. 6,900 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 4,000 | 46.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 4000 | 40.00 |
| வெள்ளை கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,200 | 42.00 |
| நிலக்கடலை(30கி) | ரூ. 7,200 | 72.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,600 | 66.00 |
| கொள்ளு | ரூ. 2,000 | 22.00 |
| கடலைப்பருப்பு (டெல்லி) | ரூ. 3,100 | 31.00 |
| சர்க்கரை | ரூ. 2,700 | 27.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஆக.2–

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

1. வி.797 22எம்.எம் ரூ. 5,905
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 6,889
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 8,706
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 8,014
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 9,280
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 9,842
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 14,622

## கோவை உழவர் சந்தை

கோவை,ஆக.2–

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

| காய்கறிகள் | (கிலோவுக்கு) | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 30–00 | காலிப்பிளவர் | ரூ. | 16–20 |
| கத்தரிக்காய் | ரூ. | 14–16 | பொறியல் தட்டை | ரூ. | 14–20 |
| வெண்டைக்காய் | ரூ. | 18–20 | தேங்காய் | ரூ. | 8–13 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 5–6 | பட்டாணி | ரூ. | 60–95 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 5–6.50 | பூண்டு | ரூ. | 85–00 |
| புடலை | ரூ. | 16–18 | கறிவேப்பிலை | ரூ. | 12–14 |
| பீர்க்கான்காய் | ரூ. | 12–14 | அகத்தி | ரூ. | 16–00 |
| சுரைக்காய் | ரூ. | 14–12 | வாழைக்காய் | ரூ. | 16–20 |
| பாகற்காய் | ரூ. | 12–14 | குடைமிளகாய் | ரூ. | 28–32 |
| கொத்தவரை | ரூ. | 14–18 | சாதா பீன்ஸ் | ரூ. | 18–20 |
| பூசணிக்காய் | ரூ. | 8–00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 38–00 |
| அரசாணிக்காய் | ரூ. | 6–00 | கறிபீன்ஸ் | ரூ. | 20–22 |
| மேராக்காய் | ரூ. | 18–00 | புஷ்பீன்ஸ் | ரூ. | 24–36 |
| பச்சை மிளகாய் | ரூ. | 24–00 | காளான் | ரூ. | 80–150 |
| குண்டு மிளகாய் | ரூ. | 28–00 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11–00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 14–15 | மாங்காய் | ரூ. | 14–16 |
| பெரியவெங்காயம் | ரூ. | 15–00 | திராட்சை | ரூ. | 65–00 |
| இஞ்சி | ரூ. | 34–00 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 16–18 |
| முருங்கைக்காய் | ரூ. | 18–22 | கொய்யா1கிலோ | ரூ. | 28–32 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 20–22 | மாதுளை1கிலோ | ரூ. | 80–00 |
| சேனைகிழங்கு | ரூ. | 25–00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 13–15 |
| கருணைகிழங்கு | ரூ. | 30–00 | வரமிளகாய் | ரூ. | 90–00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 | மாம்பழம் | ரூ. | 25–43 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14–15 | ஆப்பிள் | ரூ. | 110–126 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 16–00 | சாத்துக்குடி | ரூ. | 36–00 |
| சிறுகிழங்கு | ரூ. | 18–22 | நெல்லிக்காய் | ரூ. | 32–00 |
| முள்ளாங்கி | ரூ. | 10–15 | ஆரஞ்சு | ரூ. | 70–00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 24–26 | வெள்ளரி | ரூ. | 12–26 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 14–18 | புளி 1 கிலோ | ரூ. | 80–00 |
| நூல்கோல் | ரூ. | 18–20 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 38–00 |
| கொத்தமல்லி | ரூ. | 24–00 | அவரை | ரூ. | 20–26 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 18–20 | நிலக்கடலை | ரூ. | 35–00 |
| முட்டைகோஸ் | ரூ. | 10–12 | மக்காச்சோளம் | ரூ. | 12–20 |
| கவர்கோஸ் | ரூ. | 15–00 | | | |
| புதினா | ரூ. | 16–00 | | | |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 26900 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 27,200 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 28,400 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 11,500 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 12,300 |
| சுக்கு (புதியது) | ரூ. 12000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10,100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 10050 |
| கொப்பரை நாடன் | ரூ. 6575 |
| கொப்பரை ராசு | ரூ. 6875 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6850 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ. 7550 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7200 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 20600 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 20750 |
| ரப்பர் பால் | ரூ. 13575 |
| காப்பி | ரூ. 10600 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 3200 |
| நேந்திரகாய் | ரூ. 2450 |
| இஞ்சி | ரூ. 1000 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஆக.2–

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,710 | 110.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1190 | 76.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1240 | 78.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1100 | —— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1190 | 75.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,400 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1600 | 110.00 |
| என்.கே.எஸ்பிராண்ட் | ரூ. 1,850 | 120.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,060 | 58.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,570 | 102.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பட்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1020 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,050 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,050 | – |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.190.00 | அதிகபட்சவிலை | ரூ.260.00 |
| சராசரி விலை | ரூ.169.58 | சராசரி விலை | ரூ.235.78 |
| குறைந்தபட்சவிலை | ரூ.152.00 | குறைந்தபட்சவிலை | ரூ.201.00 |

**பட்டு நூல் ரூ.1,540**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 17,624.00 | 17,624.00 | 17,640.00 |
| ஒரு கிராம் | 2,203.00 | 2,203.00 | 2,205.00 |
| **வெள்ளி** | | | |
| 1 கிலோ | 58,585.00 | 62,600.00 | 62,500.00 |
| ஒரு கிராம் | 62.60 | 62.60 | 62.50 |

தினகரன்

## பட்டுக்கூடு கிலோ ரூ.76 சரிவு

பதிவு செய்த நாள் : 8/3/2011 0:58:53



சேலம்: சேலம் பட்டுக்கூடு அங்காடியில் கடந்த சில நாட்களாக பட்டுக்கூடுகளின் விலை சரிந்துள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். தமிழகத்தில் சேலம், தர்மபுரி, நாமக்கல், திருவண்ணாமலை, வேலூர், ஈரோடு மாவட்டங்களில் பட்டுக்கூடு உற்பத்தி நடக்கிறது. சேலம் பட்டுக்கூடு அங்காடிக்கு தினசரி 2 டன்னுக்கு மேல் பட்டுக்கூடுகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

தற்போது ஆடிமாதம் தொடங்கியுள்ளதால், சேலம் பட்டுக்கூடு அங்காடியில் கொள்முதல் குறைந்து உள்ளது. இதனால் வரலாறு காணாத அளவுக்கு பட்டுக்கூடு விலை சரிந்துள்ளது. கடந்த மாதம் அதிகபட்சமாக ரூ.260க்கு விற்கப்பட்ட மஞ்சள் பட்டுக்கூடு, தற்போது ரூ.184க்கு விற்கிறது.